## தமிழ்நாடு கலைத்திட்ட வடிவமைப்பு 2025

## பரிந்துரைக்கப்பட்ட வரைவுப் பாடத்திட்டம், கற்பித்தல் அணுகுமுறைகள் மற்றும் மதிப்பீட்டு உத்திகள் – சமூக அறிவியல் – 9 மற்றும் 10 ஆம் வகுப்பு

**அறிமுகம்**

தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை (TNSEP–2025) இன்படி தொலைநோக்குப் பார்வையுடன் ஒருங்கிணைந்த, ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளுக்கான சமூக அறிவியல் பாடத்திட்டமானது சமூக அக்கறையுள்ள, பகுத்தறியும் சிந்தனைத் திறன் கொண்ட, மக்களாட்சி பொறுப்புணர்வுமிக்க மாணவர்களை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டம், வரலாற்று மாற்றங்கள், புவியியல் செயல்முறைகள், ஆட்சி அமைப்புகள் மற்றும் பொருளாதார அமைப்புகள் ஆகியவை தமிழ்நாடு, இந்தியா, மற்றும் உலகளவில் எவ்வாறு தொடர்புடையதாக உள்ளன என்பதை மாணவர்கள் ஆழ்ந்து புரிந்துகொள்ள இப்பாடத்திட்டம் உதவுகிறது. மேலும், சமூக சமத்துவம், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அரசியலமைப்பு குறித்த புரிதல் மற்றும் இருபத்தொன்றாம் நூற்றாண்டுத் திறன்கள் ஆகியவற்றை வளர்ப்பதற்கும் இப்பாடத்திட்டம் வழிவகுக்கிறது.

மக்களாட்சி, சமூக நீதி, பன்முகத்தன்மை மற்றும் பாலின சமத்துவம் ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, இப்பாடத்திட்டத்தின் கற்றல் உள்ளடக்கம் பண்டைய கால வரலாற்று மாற்றங்களிலிருந்து இடைக்காலம் மற்றும் நவீன காலம் வழியாகத் தற்கால உலகச் சூழல் வரை படிப்படியாக விரிவடைகிறது. தமிழ்நாட்டின் வரலாற்று மற்றும் சமூக அனுபவங்கள், தேசிய மற்றும் சர்வதேசப் பார்வைகளுடன் ஒப்பீட்டு அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை – 2025 இன்படி, கற்றலில் சூழல்சார் அறிவு, மண்டல பொருத்தப்பாடு, பன்மொழிப் புரிதல், அனுபவக் கற்றல் மற்றும் சான்றுகள் அடிப்படையிலான ஆய்வு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதன் மூலம், மாணவர்கள் வகுப்பறையில் பெறும் அறிவைத் தங்களது அன்றாட சமூக வாழ்வியல் சூழலோடு தொடர்புபடுத்திப் புரிந்துகொள்ளும் திறனைப் பெறுகின்றனர்.

TNSCERT DRAFT SYLLABUS

மாணவர்கள் சான்றுகளைப் பகுத்தறியவும், வரலாற்றுச் செயல்முறைகளில் தொடர்ச்சியையும் மாற்றங்களையும் கண்டறியவும், தரவுகளைப் புரிந்துகொண்டு விளக்கவும், தமிழ்நாடு மற்றும் உலகளவில் ஏற்படும் சமூக, பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை ஆராயவும், தங்களுடைய சொந்தக் கருத்துகளை உருவாக்கவும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

| **வரலாறு**<br>**கலைத்திட்ட இலக்கு – 1 : புவியின் பரிணாம வளர்ச்சி, மனிதனின் தோற்றம், வரலாற்றுக்கு முந்தைய காலம் மற்றும் தொடக்ககால வரலாற்றில் சமூகங்கள் ஆகியவை உருவான விதத்தைப் புரிந்துகொள்ளல்.** | | |
|---|---|---|
| **திறன்கள்** | **பாடப்பொருள்** | |
| | **வகுப்பு -9** | **வகுப்பு - 10** |
| **C–1.1.** கற்காலம் முதல் இரும்புக் காலம் வரை ஏற்பட்ட தொழில்நுட்ப மற்றும் சமூக மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்து, உலகின் தொடக்ககாலப் பண்டைய நாகரிகங்கள் தோன்றிய விதத்தை ஆராய்தல். | **மனிதப் பரிணாம வளர்ச்சியும் வரலாற்றுக்கு முந்தைய காலமும்**<br>1. புவியின் தோற்றமும் புவியியல் காலக்கட்டங்களும்<br>2. மனிதப் பரிணாம வளர்ச்சி<br>3. மனித இடப்பெயர்வு – பழைய கற்காலம் முதல் செம்புக்காலம் வரை<br>4. இரும்புக் காலம் – இந்தியா<br>**பண்டைய உலக நாகரிகங்கள்**<br>1. மெசபடோமிய நாகரிகம் – பொ.ஆ.மு - 3500<br>2. எகிப்திய நாகரிகம் – பொ.ஆ.மு -3100<br>3. சிந்துவெளி நாகரிகம் – பொ.ஆ.மு - 2600 | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| | 4. சீன நாகரிகம் – பொ.ஆ.மு -1600<br>5. நாகரிகங்கள் வீழ்ச்சியடைந்ததில் சுற்றுச்சூழலின் நிலையின்மை ஏற்படுத்திய தாக்கம் – ஒப்பீட்டு பகுப்பாய்வு | |
| | **தமிழ் நாகரிகங்கள்**<br>1. வைகை மற்றும் தாமிரபரணி (பொருநை) ஆறுகளின் கரையோர நாகரிகம்<br>2. சங்க காலம் – அரசியல், சமூக மற்றும் பொருளாதார நிலைகள்<br>3. நகரங்கள் மற்றும் துறைமுகங்களின் தோற்றமும் வளர்ச்சியும்<br>4. பண்டைய தமிழர் குடியிருப்புகள் பற்றிய தொல்பொருள் ஆய்விடங்கள் – சமீபத்திய அகழாய்வுகள் *(கொடுமணல், ஆதிச்சநல்லூர், கீழடி, சிவகளை)*<br>5. நம்பிக்கைகள் மற்றும் வழிபாட்டு முறைகள் | |

TNSCERT DRAFT SYLLABUS

| கலைத்திட்ட இலக்கு – 2 : உலகின் பல்வேறு சமூகங்களில் ஏற்பட்ட தத்துவ, சமய மற்றும் பண்பாட்டு மாற்றங்களை அறிந்துகொள்ளுதல். | | |
|---|---|---|
| C.2.1. அறிவுசார் மற்றும் சமய இயக்கங்கள் சமூக–அரசியல் சிந்தனைகளை எவ்வாறு வடிவமைத்தன என்பதையும், அவை அரசுகள் உருவாகும் செயல்முறைகளை எவ்வாறு முன்னெடுத்து தொடக்ககால அரசுகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தன என்பதையும் விளக்குதல். | **பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டின் அறிவுசார் எழுச்சி**<br>1. கன்பூசியனிசம், தாவோயிசம் மற்றும் சோரோட்டிரியனிசம்<br>2. வேத காலம் – ரிக் வேத காலம் மற்றும் பிந்தைய வேத காலம்<br>3. சமணம், பௌத்தம் மற்றும் ஆசிவக பிரிவு<br>4. பண்டைய இந்தியாவில் அரசுகளின் உருவாக்கம் – மகாஜனபதங்கள்-மகதம் - மௌரிய அரசும் அதன் நிருவாகமும் | |
| C.2.2. முக்கிய செவ்வியல் நாகரிகங்களின் சமூக, அரசியல் மற்றும் பண்பாட்டு மரபுகளை மதிப்பீடு செய்தல் | **செவ்வியல் உலகம்**<br>1. ஹெலனிக் உலகம் கிரேக்கம்<br>2. ரோமானியப் பேரரசும் அதன் மரபும்<br>3. கிறித்தவ சமயத்தின் எழுச்சி<br>4. பைசாண்டியப் பேரரசு | |
| C.2.3. இடைக்கால கிழக்கு ஆசியாவில் ஏற்பட்ட முக்கிய அரசியல் மற்றும் சமய முன்னேற்றங்களைப் பகுப்பாய்வு செய்தல். | **இடைக்கால கிழக்கு ஆசியா**<br>1. சீனா மற்றும் ஜப்பானின் அரச வம்சங்கள்<br>2. இஸ்லாமின் | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| | எழுச்சியும் இஸ்லாமியப் பேரரசுகளின் தோற்றமும்<br>3. சிலுவைப் போர்கள்<br>4. உதுமானியப் பேரரசு | |
| **C.2.4.** இடைக்கால இந்திய சமூதாயத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையும் சமூக–பொருளாதார வாழ்க்கையையும் ஆராய்தல். | **பண்டைய, இடைக்கால மற்றும் பிந்தைய இடைக்காலம் – அரசும் சமூகமும்**<br>1. இந்தியா : தில்லி சுல்தானியம் – மம்லுக் (அடிமை), கில்ஜி, துக்ளக், சையத் மற்றும் லோடி வம்சங்கள்<br>2. பிந்தைய இடைக்காலம் – முகலாயர்கள் மற்றும் மராத்தியர்கள்<br>3. தமிழ்நாடு – பல்லவர்கள், சோழர்கள் மற்றும் பாண்டியர்கள்<br>4. பிந்தைய இடைக்காலத் தென்னிந்திய அரசுகள் – விஜயநகரப் பேரரசு, பாமினி மற்றும் தக்காண சுல்தானியங்கள்<br>5. சமூகம், சமயம் மற்றும் பண்பாடு – பொருளாதாரம் - இடைக்கால இந்தியாவில் வேளாண்மை மற்றும் வணிகம் – நகரமயமாக்கல் | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| **C.2.5.** மறுமலர்ச்சி, சமயச் சீர்திருத்த இயக்கம் மற்றும் கடல் வழி ஆய்வுப் பயணங்கள் ஆகியவை நவீன உலகின் உருவாக்கத்தை எவ்வாறு வடிவமைத்தன என்பதை மதிப்பீடு செய்தல். | **பகுத்தறிவுக் காலம்**<br>1. மறுமலர்ச்சி<br>2. கலை, அறிவியல் மற்றும் இலக்கியத்தில் ஏற்பட்ட தாக்கம்<br>3. புதிய கடல் மற்றும் தரைவழிப் பாதைகளைக் கண்டறிதல்<br>4. சமயச் சீர்திருத்த இயக்கம் மற்றும் எதிர் சீர்திருத்த இயக்கம்<br>5. வாணிபப் புரட்சி – முதலாளித்துவத்தின் எழுச்சி | |
| **C.2.6.** நவீன உலகில் ஏற்பட்ட முக்கிய அரசியல் புரட்சிகளுக்கான காரணங்களையும் அவற்றின் தாக்கங்களையும் பகுப்பாய்வு செய்தல். | **தொழிற்புரட்சிக் காலம்**<br>1. இங்கிலாந்தில் முதல் தொழிற்புரட்சி – காரணங்கள், நிகழ்வுகள் மற்றும் விளைவுகள்<br>2. பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் அமெரிக்காவில் தொழிற்புரட்சி பரவுதல்<br>3. தொழில்துறை முதலாளித்துவத்தின் உலகளாவிய தாக்கம் – இந்தியாவில் அதன் தாக்கம்<br>4. தொழிலாளர் இயக்கங்களின் தோற்றம்<br>5. இந்தியாவில் ஐரோப்பிய காலனிய ஆட்சி – அதன் தாக்கம் | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| **C–2.7.** ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் காலனிய ஆட்சி விரிவடைந்ததையும், பொருளாதாரம் மற்றும் வேளாண்மையில் ஏற்படுத்திய தாக்கத்தையும் ஆராய்தல். | **ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் காலனியத்துவம்**<br>1. இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகளில் காலனிய குடியேற்றங்கள்<br>2. ஆப்பிரிக்கா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் ஐரோப்பிய காலனியாதிக்கத்திற்கான போட்டி | |
| **கலைத்திட்ட இலக்கு – 3 : இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட முக்கிய உலகளாவிய மோதல்கள் மற்றும் போர்களையும், அவற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட புவிசார் அரசியல் மாற்றங்களையும் மதிப்பீடு செய்தல்.** | | |
| **C–3.1.** முதல் உலகப் போரின் காரணங்கள், நிகழ்வுகள், விளைவுகள் ஆகியவற்றைப் பகுப்பாய்தல். | | **முதல் உலகப் போரின் தொடக்கமும் அதன் தொடர்ச்சியும்**<br>1. காலனிகளைக் கைப்பற்றுவதற்கான போட்டி மற்றும் வல்லரசுகளுக்கு இடையிலான ஆதிக்கப் போட்டி<br>2. முதல் உலகப் போரின் காரணங்கள், நிகழ்வுகள் மற்றும் விளைவுகள்<br>3. ரஷ்யப் புரட்சி<br>4. பன்னாட்டுச் சங்கம் |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| C–3.2. இரு உலகப் போர்களுக்கு இடைப்பட்டக் காலத்தில் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களை மதிப்பீடு செய்தல். | | **இரு உலகப் போர்களுக்கு இடையிலான உலகம்**<br>1. பொருளாதாரப் பெருமந்தம்<br>2. பாசிசம் மற்றும் நாசிசத்தின் எழுச்சி<br>3. காலனிய எதிர்ப்பு இயக்கங்களும் ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் காலனிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறும் முயற்சியும்<br>4. தென் அமெரிக்காவின் அரசியல் முன்னேற்றங்கள் |
| C–3.3. இரண்டாம் உலகப் போர் தொடங்கியதற்கான சூழ்நிலைகளையும், அது சர்வதேச அரசியலில் ஏற்படுத்திய தாக்கங்களையும் ஆராய்தல். | | **இரண்டாம் உலகப் போர்**<br>1. இரண்டாம் உலகப் போரின் காரணங்கள், நிகழ்வுகள் மற்றும் விளைவுகள்<br>2. பேரழிவும் பின்விளைவுகளும்<br>3. புதிய சர்வதேச ஒழுங்கு – ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியமைப்பு (IMF)<br>4. போருக்குப் பிந்தைய ஐரோப்பிய நல அரசுகள் |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| **C–3.4.** அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றியம் வல்லரசுகளாக உருவெடுத்ததையும், அதன் மூலம் தொடங்கிய பனிப்போர் காலத்தையும், இறுதியில் சோவியத் ஒன்றியம் சிதைந்ததையும் விவரித்தல். | | **இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய உலகம்**<br><br>1. சீனப் புரட்சி – 1911–1949<br>2. பனிப்போர் – அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றியத்திற்கு இடையிலான போட்டி – இராணுவக் கூட்டணிகளின் உருவாக்கம் – அணிசேரா இயக்கம்<br>3. கொரியப் போர்<br>4. கியூபாவில் புரட்சி<br>5. அரபு–இஸ்ரேல் போர்<br>6. வியட்நாம் போர்<br>7. ஐரோப்பிய ஒன்றியத்தை நோக்கிய பயணம்<br>8. பெர்லின் சுவர் வீழ்ச்சியும் சோவியத் ஒன்றியத்தின் சிதைவும் |

TNSCERT DRAFT SYLLABUS

| **கலைத்திட்ட இலக்கு – 4 : இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் நடைபெற்ற காலனிய எதிர்ப்பு இயக்கங்களை மதிப்பீடு செய்தல்.** | | |
|---|---|---|
| **C–4.1.** தமிழ்நாட்டில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற தொடக்ககாலக் கிளர்ச்சிகளின் காரணங்களையும் முக்கியத்துவத்தையும் ஆராய்தல். | | **தமிழ்நாட்டில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான தொடக்ககாலக் கிளர்ச்சிகள்**<br>1. ஆங்கிலேயர்களுக்கு எதிரான மண்டல ஆட்சியாளர்களின் எதிர்ப்பு<br>2. பாளையக்காரர்களின் கிளர்ச்சி (1755–1801)<br>3. வேலூர் கிளர்ச்சி – 1806 |
| **C–4.2.** சமூக மற்றும் சமயச் சீர்திருத்த இயக்கங்களையும், பாரம்பரிய இந்தியச் சமூகத்தை நவீன சமூகமாக மாற்றுவதன் பங்கினையும் விளக்குதல். | | **19ஆம் நூற்றாண்டின் சமூக மற்றும் சமயச் சீர்திருத்த இயக்கங்கள்**<br>1. வங்காளத்தில் தொடக்ககாலச் சீர்திருத்த இயக்கங்கள்<br>2. இந்து மறுமலர்ச்சி இயக்கம்<br>3. சாதி எதிர்ப்பு இயக்கங்கள்<br>4. இஸ்லாமியச் சீர்திருத்த இயக்கங்கள் |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| | | 5. பார்சி சீர்திருத்த இயக்கம்<br>6. சீக்கியச் சீர்திருத்த இயக்கம்<br>7. தமிழ்நாட்டின் சமூகச் சீர்திருத்தவாதிகள் |
| **C–4.3.** ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக பழங்குடியினர், விவசாயிகள் மற்றும் படைவீரர்கள் நடத்திய முக்கியக் கிளர்ச்சிகளையும், காந்தியடிகளுக்கு முந்தைய காலத்தில் கல்வியறிவு பெற்றோரால் முன்னெடுக்கப்பட்ட அமைப்புசார்ந்த இயக்கங்களையும் காலவரிசைப்படி விவரித்தல். | | **காலனிய எதிர்ப்பு இயக்கங்களும் தேசிய உணர்வின் தோற்றமும்**<br>1. விவசாயிகள் மற்றும் பழங்குடியினரின் எதிர்ப்பு இயக்கங்கள்<br>2. 1857ஆம் ஆண்டின் மாபெரும் கிளர்ச்சி<br>3. ஆங்கிலேய அரசின் கீழ் விவசாயிகளின் கிளர்ச்சிகள்<br>4. இந்திய தேசிய காங்கிரஸ் (1870–1885)<br>5. வங்காளப் பிரிவினை – சுதேசி இயக்கம் (1905–1911)<br>6. தன்னாட்சி இயக்கம் (Home Rule Movement) – 1916 |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| **C–4.4.** காந்தியின் தலைமையில் இந்தியாவின் சுதந்திரத்திற்காக நடைபெற்ற அகிம்சைப் போராட்டங்களைப் பகுப்பாய்வு செய்தல். | | **தேசியவாதம் – காந்திய காலம்**<br>1. காந்தியடிகளும் மக்களின் பெருமளவிலான பங்கேற்பும்<br>2. இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் காந்தியடிகள் நடத்திய தொடக்ககால சத்தியாகிரகங்கள்<br>3. ஒத்துழையாமை இயக்கமும் அதன் வீழ்ச்சியும்<br>4. சட்டமறுப்பு இயக்கம்<br>5. பொதுவுடைமை (சோஷியலிஸ்ட்) இயக்கங்களின் தொடக்கம்<br>6. 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட முதல் காங்கிரஸ் அமைச்சரவை |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| | | 7. வெள்ளையனே வெளியேறு இயக்கம் – 1942<br>8. விடுதலையை நோக்கி |
| **C–4.5.** இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கை ஆய்வு செய்தல். | | **இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கேற்பு**<br>1. தமிழ்நாட்டில் தொடக்ககால தேசிய உணர்வு தூண்டப்படுதல்<br>2. சுதேசி இயக்கம்<br>3. பிராமணர் அல்லாதோர் இயக்கமும் காங்கிரசிற்கு சவாலும்<br>4. தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம், சட்டமறுப்பு இயக்கம் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் |
| **C–4.6.** தமிழ்நாட்டின் சமூகத்தை மாற்றியமைத்த முக்கிய சமூக மற்றும் அரசியல் இயக்கங்களைப் பற்றி விவாதித்தல். | | **தமிழ்நாட்டில் சமூக மாற்றம்**<br>1. தமிழ் மறுமலர்ச்சி<br>2. திராவிட இயக்கத்தின் எழுச்சி<br>3. தென்னிந்திய நல |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| | | உரிமைச் சங்கம் (நீதிக்கட்சி)<br>4. சுயமரியாதை இயக்கம்<br>5. தமிழ்நாட்டில் தொழிலாளர் இயக்கங்கள்<br>6. விடுதலைக்கு முன்பு மொழிப் போராட்டம்<br>7. பெண்கள் இயக்கங்கள் |
| **புவியியல்**<br>**கலைத்திட்ட இலக்கு – 5 : மனிதர்களுக்கும், இயற்கைச் சூழலுக்கும் இடையிலான தொடர்பையும், அது ஒரு பகுதியின் வாழ்வாதாரம் மற்றும் பண்பாட்டுப் பன்முகத்தன்மையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதையும் புரிந்துகொள்ளுதல்** | | |
| **C–5.1.** வட்டாரங்களின் நிலத்தோற்றம், வடிகால் அமைப்புகள் மற்றும் காலநிலையை அடையாளம் காணுதல். | **1. தமிழ்நாடு – நிலத்தோற்றமும் காலநிலையும்**<br>1. அமைவிடம், பரப்பளவு மற்றும் நிருவாகப் பிரிவுகள்<br>2. இயற்கையமைப்புப் பிரிவுகள்<br>3. வடிகால் அமைப்பு – முக்கிய ஆறுகள் மற்றும் ஏரிகள்<br>4. பருவகாலங்கள் மற்றும் காலநிலை | **1.இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகால் அமைப்பு**<br>1. இந்தியாவும் உலகமும்<br>2. அமைவிடம், பரப்பளவு மற்றும் எல்லைகள்<br>3. நிலத்தோற்றப் பிரிவுகள்<br>4. வடிகால் அமைப்பு |
| **C–5.2.** நிலத்தோற்றம், காலநிலை, மண், இயற்கைத் தாவரங்கள், வனவிலங்குகள் மற்றும் வேளாண்மை போன்ற இயற்கைச் சூழலின் பல்வேறு கூறுகளுக்கு | **2. இயற்கைத் தாவரங்கள், மண் மற்றும் வேளாண்மை**<br>1. இயற்கைத் தாவரங்கள்<br>2. வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் | **2. காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள்**<br>1. பருவகாலங்கள்<br>2. இந்தியப் பருவமழை |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| இடையிலான தொடர்புகளைப் புரிந்துகொள்ளுதல். | ஈரநிலங்கள்<br>3. மண் வகைகள்<br>4. நீர்ப்பாசனம் மற்றும் பல்நோக்குத் திட்டங்கள்<br>5, முக்கியப் பயிர்கள்<br>6, கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடித்தொழில் | 3. வெப்பநிலை<br>4. மழைப்பொழிவு<br>5. இயற்கைத் தாவரங்கள்<br>6. காலநிலை மண்டலங்கள்<br>7. வனவிலங்கு பாதுகாப்பு<br>**3. மண், நீர்ப்பாசனம் மற்றும் வேளாண்மை**<br>1. மண்<br>2. நீர்ப்பாசனம் மற்றும் பல்நோக்குத் திட்டங்கள்<br>3. வேளாண்மையின் வகைகள்<br>4. முக்கியப் பயிர்கள்<br>5. கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடித்தொழில்<br>6. வேளாண்மை தொடர்பான சிக்கல்கள் |

TNSCERT DRAFT SYLLABUS

| கலைத்திட்ட இலக்கு – 6 : கனிமங்கள், தொழில்கள், போக்குவரத்து மற்றும் வணிகம், மக்கள்தொகையின் கூறுகள், பரவல், அடர்த்தி ஆகியவற்றின் மாற்றங்களை விளக்குதல்; மக்கள்தொகை மாற்றங்கள் நகரமயமாக்கலுடனும் அதன் சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்களுடனும் எவ்வாறு தொடர்புடையவை என்பதைப் புரிந்துகொள்ளுதல்; மனித மேம்பாட்டுக் குறியீடுகளை மதிப்பீடு செய்து மண்டல ஏற்றத்தாழ்வுகளையும் அவற்றைச் சரிசெய்வதற்கான கொள்கைசார் வழிமுறைகளையும் கண்டறிதல். | | |
|---|---|---|
| C–6.1. வளங்களின் சாத்தியக்கூறுகளையும், மனிதச் செயல்பாடுகள் சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் ஆய்வு செய்தல்; போக்குவரத்து மற்றும் வணிகத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை விளக்குதல்; பேரிடர்களின் தாக்கங்களையும் அவற்றைத் தணிப்பதற்கான நடவடிக்கைகளையும் ஆய்வு செய்தல். | **3.கனிமங்கள், தொழில்கள், போக்குவரத்து மற்றும் வணிகம்**<br>1. கனிமங்கள்<br>2. ஆற்றல் வளங்கள்<br>3. தொழில்கள்<br>4. தொழில்துறை வழித்தடங்கள்<br>5. போக்குவரத்து – தரைவழி, வான்வழி, நீர்வழி மற்றும் குழாய்வழி<br>6. முக்கியத் துறைமுகங்கள்<br>7. வணிகம் – முக்கிய இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள்<br>8. தகவல் தொழில்நுட்பச் சேவைகள்<br>**4.மக்கள்தொகையும் மனிதவள மேம்பாடும்**<br>1. மக்கள்தொகைப் பரவல், அடர்த்தி மற்றும் வளர்ச்சி<br>2. மக்கள்தொகைக் கூறுகள் – கல்வியறிவு விகிதம், | **4. வளங்கள்**<br>1. கனிமங்கள் – உலோக மற்றும் உலோகமற்ற கனிமங்கள்<br>2. கனிம எரிபொருள்கள்<br>3. ஆற்றல் வளங்கள் – மரபுசார் மற்றும் மரபுசாரா வளங்கள்<br>4. வளங்களைப் பாதுகாத்தல்<br>**5. தொழில்கள்**<br>1. தொழில்கள்<br>2. இந்தியாவின் தொழில்துறைப் பகுதிகள்<br>3. தொழில்கள் எதிர்கொள்ளும் சவால்கள்<br>**6. மக்கள்தொகை**<br>1. மக்கள்தொகைப் பரவல், அடர்த்தி, வளர்ச்சி |

TNSCERT DRAFT SYLLAB

| | | |
|---|---|---|
| | ஆயுட்காலம், பாலின விகிதம் மற்றும் வயது–பாலினப் பிரமிடு<br>3. பழங்குடியினர்<br>4. நகரமயமாக்கல்<br>5. ஊரக மற்றும் நகர்ப்புற வளர்ச்சி<br>**5.பேரிடர்கள்**<br>1. இயற்கைப் பேரிடர்கள் மற்றும் மனிதனால் ஏற்படும் பேரிடர்கள்<br>2. பேரிடர் அபாயக் குறைப்பு<br>3. தமிழ்நாட்டில் காலநிலை மாற்றம்<br>4. வெப்ப அலைகள்<br>5. பருவமழை பொய்த்தல் மற்றும் அதன் தாக்கம் | மற்றும் கூறுகள்<br>2. நகரமயமாக்கல் மற்றும் அதன் தாக்கங்கள்<br>3. இந்தியாவில் மனிதவள மேம்பாடு |
| **C–6.2.** பொருளாதார ஒருங்கிணைப்பு மற்றும் உலகளாவிய அமைவிடம் கண்டறியும் அமைப்பு (GPS) மூலம் போக்குவரத்து வலையமைப்பு மற்றும் வர்த்தக முறைகளின் பங்கினைப்பு பகுப்பாய்வு செய்தல்: மண்டலத்தில் மேற்கொள்ளப்படும் நிலையான வளர்ச்சித் திட்டங்களைப் புரிந்துக் கொள்ளுதல் | 6. **நிலையான வளர்ச்சி**<br>1. தமிழ்நாட்டின் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான (SDG) முன்னெடுப்புகள்<br>2. தமிழ்நாட்டின் காலநிலை சார்ந்த முன்னெடுப்புகள்<br>3. நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாடு<br>4. கடலோர மேலாண்மை<br>5. நகர்ப்புற மேம்பாடு | **7. போக்குவரத்து, தகவல்தொடர்பு மற்றும் வணிகம்**<br>1. போக்குவரத்து<br>**2.** தகவல்தொடர்பு<br>3. இந்திய விண்வெளித் திட்டத்தின் வளர்ச்சி<br>4. தொலை நுண்ணுணர்வு மையங்கள் மற்றும் |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| | 6. மனிதவள மேம்பாட்டுக் குறியீடு | சேவைகள்<br>5. வணிகம்<br>6. போக்குவரத்தில் எரிசக்தி தொடர்பான சிக்கல்கள் மற்றும் அவற்றைத் தணிக்கும் நடவடிக்கைகள்<br>7. போக்குவரத்தின் எதிர்கால வளர்ச்சிகள் |
| **குடிமையியல்**<br>**கலைத்திட்ட இலக்கு – 7: மக்களாட்சி அமைப்புகள், அரசியலமைப்பின் கொள்கைகள், குடிமக்களின் உரிமைகள், சமூகத்தில் பொறுப்புடன் நடந்து கொள்ளுதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை ஆய்வு செய்தல்.** | | |
| **C–7.1.** பல்வேறு வகையான அரசாங்க அமைப்புகளை வேறுபடுத்திக் காணுதல் மற்றும் மக்களாட்சியின் முக்கிய அம்சங்களைப் புரிந்துகொள்ளுதல். | **ஆட்சி முறைகள் மற்றும் மக்களாட்சி**<br>1. அரசாங்க அமைப்புகள்<br>2. மக்களாட்சி என்றால் என்ன? | |
| **C–7.2.** மக்களாட்சிப் பங்கேற்பில் தேர்தல்கள், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்களின் பங்கினைப் பகுப்பாய்வு செய்தல். | **தேர்தல்கள் மற்றும் அரசியல் கட்சிகள்**<br>1. இந்தியாவில் தேர்தல் முறை<br>2. அரசியல் கட்சிகள்<br>3. அழுத்தக் குழுக்கள்<br>4. மக்கள் ஒருங்கிணைப்பும் பங்கேற்பும் | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| C–7.3. மனித உரிமைகளின் முக்கியத்துவத்தையும், அதனை தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் மூலம் பாதுகாப்பதன் அவசியத்தையும் ஆய்வு செய்தல். | **மனித உரிமைகள்**<br>1. மனித உரிமைகள் – வரையறை<br>2. உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் (UDHR, 1948)<br>3. இந்தியாவின் அடிப்படை உரிமைகள்<br>4. தேசிய மனித உரிமைகள் ஆணையம்<br>5. மாநில மனித உரிமைகள் ஆணையம் | |
| C–7.4. அரசியலமைப்பின் பொருளையும் அதன் பல்வேறு வகைகளையும் வேறுபடுத்தி அறிதல். | **ஆட்சிமுறைகள்**<br>1. அரசியலமைப்பின் வகைகள் | |
| C–7.5. உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்தல். | **உள்ளாட்சி அமைப்பு**<br>1. உள்ளாட்சி அமைப்பின் பொருள்<br>2. வரலாற்றுப் பின்னணி<br>3. சுதந்திரத்திற்குப் பிறகான உள்ளாட்சி அமைப்பு<br>4. கிராம ஊராட்சி | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| **C–7.6.** சாலை விபத்துகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து, பாதுகாப்பான சாலைப் பயணத்திற்கான நடைமுறைகளைப் பின்பற்றுதல். | **சாலைப் பாதுகாப்பு**<br>1. சாலை விபத்துகளுக்குக்கான பல்வேறு காரணிகள்<br>2. சாலை விபத்துகளினால் ஏற்படும் விளைவுகள்<br>3. சாலை விபத்துகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்<br>4. குழந்தைகள் அறிந்திருக்க வேண்டிய சாலைப் பாதுகாப்பு விதிமுறைகள் | |
| **கலைத்திட்ட இலக்கு – 8: இந்தியாவின் அரசியலமைப்பு அமைப்பு, ஆட்சி முறைகள் மற்றும் வெளிநாட்டு உறவுகளைப் பகுப்பாய்வு செய்தல்.** | | |
| **C–8.1.** இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள் மற்றும் அடிப்படைக் கொள்கைகளைப் பகுப்பாய்வு செய்தல். | | **இந்திய அரசியலமைப்பு**<br>1. அரசியலமைப்பின் தேவை<br>2. இந்திய அரசியலமைப்பு உருவாக்கம்<br>3. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள்<br>4. முகவுரை<br>5. குடியுரிமை<br>6. அடிப்படை உரிமைகள்<br>7. அரசின் நெறிமுறைக் |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| | | கோட்பாடுகள்<br>8. அடிப்படைக் கடமைகள்<br>9. மத்திய – மாநில உறவுகள்<br>10. அலுவல் மொழிகள்<br>11. அவசரகால ஏற்பாடுகள்<br>12. அரசியலமைப்புச் சட்டதிருத்தம்<br>13. அரசியலமைப்புச் சீர்திருத்தக் குழுக்கள் |
| **C–8.2.** மத்திய அரசின் அமைப்பையும் அதன் செயல்பாடுகளையும் ஆய்வு செய்தல். | | **மத்திய அரசு**<br>1. இந்தியக் குடியரசுத் தலைவர்<br>2. துணைக் குடியரசுத் தலைவர்<br>3. பிரதமர்<br>4. இந்திய நாடாளுமன்றம்<br>5. நீதித்துறை |
| **C–8.3.** மாநில அரசின் அமைப்பையும் அதன் செயல்பாடுகளையும் ஆய்வு செய்தல். | | **மாநில அரசு**<br>1. நிருவாகத்துறை<br>2. முதலமைச்சர்<br>3. மாநிலச் சட்டமன்றம்<br>4. மாநிலச் சட்டமன்றத்தின் செயல்பாடுகள்<br>5. மாநில நீதித்துறை |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| **C–8.4.** மண்டல அளவிலான மற்றும் உலகளாவிய சூழலில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள் மற்றும் நோக்கங்களைப் பகுப்பாய்வு செய்தல். | | **இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை**<br>1. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள்<br>2. பஞ்சசீலம்<br>3. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள்<br>4. அணிசேரா இயக்கம் (NAM), 1961<br>5. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கருத்துகள்<br>6. சார்க் (SAARC) – தெற்காசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பு<br>7. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் தற்காலச் சூழலின் மாற்றமும் தொடர்ச்சியும் |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| **C–8.5.** அண்டை நாடுகள் மற்றும் உலக நாடுகளுடன் இந்தியா கொண்டுள்ள தூதரக உறவுகளை ஆய்வு செய்தல். | | **இந்தியாவின் பன்னாட்டு உறவுகள்**<br>1. இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும்<br>2. வளர்ச்சியடைந்த நாடுகளுடனான இந்தியாவின் உறவுகள்<br>3. இந்தியாவும் மேற்கு ஆசியாவும்<br>4. இந்தியாவும் சர்வதேச அமைப்புகளும் |
| **பொருளியல்**<br>**கலைத்திட்ட இலக்கு – 9: மக்களின் வாழ்வாதாரம் மற்றும் நிலைத்தன்மையைப் பாதிக்கும் முக்கிய பொருளாதார செயல்முறைகள் மற்றும் வளர்ச்சிப் போக்குகளைப் பகுப்பாய்வு செய்தல்.** | | |
| **C–9.1.** நிலையான வளர்ச்சிக் குறித்த பல்வேறு கருத்துக்களையும் அதற்கான அளவீடுகளையும் பகுப்பாய்வு செய்தல் | **மேம்பாட்டைப் புரிந்துகொள்ளுதல்(Understanding Development)**<br>1. மேம்பாட்டைப் பற்றிய பல்வேறு கண்ணோட்டங்கள்<br>2. பொருளாதார மேம்பாட்டிற்கானக் குறியீடுகள்<br>3. நிலையான மேம்பாடு<br>4. நிலையான மேம்பாட்டிற்கானக் | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| | கோட்பாடுகள்<br>5. இந்தியாவின் சுற்றுச்சூழல் கொள்கைகள் | |
| C–9.2. இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அமைப்பு மற்றும் அதன் வளர்ச்சிப் போக்குகளை ஆராய்தல். | **இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு**<br>1. இந்தியாவில் வேலைவாய்ப்புக் கட்டமைப்பு<br>2. வேலைவாய்ப்பின் வகைகள் (ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்படாத துறைகள்)<br>3. வேலைவாய்ப்பு அமைப்பு | |
| C–9.3. பொருளாதாரத்தில் பணம் மற்றும் கடன் எவ்வாறு வளர்ச்சியடைந்தன என்பதையும் அது எவ்வாறு செயல்படுகின்றன என்பதையும் ஆய்வு செய்தல். | **பணம் மற்றும் கடன்**<br>1. பண்டமாற்று முறை<br>2. பண்டப் பணம்<br>3. உலோகப் பணம்<br>4. காகிதப் பணம்<br>5. வங்கிப் பணம்<br>6. மின்னணு மற்றும் மின்னுருப் பணம்<br>7. மெய்நிகர் (Cryptocurrency) பணம்<br>8. இந்திய ரிசர்வ் வங்கியின் பங்கு<br>9. பணம் – விலைத் தொடர்பு<br>10. பணத்தின் செயல்பாடுகள் | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| | 11. கடன் | |
| **C–9.4.** தமிழ்நாட்டின் வேளாண்மை நடைமுறைகள், வளங்கள், உற்பத்தித் திறன் முதலானவற்றை மதிப்பீடு செய்தல். | **தமிழ்நாட்டில் வேளாண்மை**<br>1. வேளாண் தொழிலில் ஈடுபடுவோரின் பிரிவுகள்<br>2. நிலப் பயன்பாட்டின் வகைகள்<br>3. வேளாண்மைக்கான நீர்ஆதாரங்கள்<br>4. வேளாண்மையின் நவீனமயமாக்கல்<br>5. மண் பாதுகாப்பின் நோக்கங்கள்<br>6. பயிர் சுழற்சி<br>7. நீர்ப்பாசனமும் பயிர் வகைகளும்<br>8. பத்து ஆண்டுகால வேளாண் வளர்ச்சி<br>9. வேளாண் உற்பத்தித் திறன் | |
| **C - 9.5.** இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் இடம்பெயர்வின் முறைகள், காரணங்கள் மற்றும் கொள்கைகளை ஆய்வு செய்தல். | **இடம்பெயர்தல்**<br>1. இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் உள்ள இடம்பெயர்தலின் பரவல்<br>2. இடம்பெயர்தலுக்கான காரணிகள்<br>3. இடம்பெயர்வு கொள்கைகள் | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| | | |
| **கலைத்திட்ட இலக்கு – 10: தேசிய மற்றும் மண்டல பொருளாதாரங்களை வடிவமைக்கும் கொள்கைகள், உற்பத்தி முறைகள் மற்றும் வளர்ச்சிக்கான செயல்முறைகளை ஆய்வு செய்தல்.** | | |
| **C – 10.1.** பொருளாதாரத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அமைப்பு, வளர்ச்சி மற்றும் பல்வேறு துறைகளின் பங்களிப்பை ஆய்வு செய்தல். | | **மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம்**<br><br>1. நாட்டின் வருமானம்<br>2. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)<br>3. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் இயைபு<br>4. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பல்வேறு துறைகளின் பங்களிப்பு<br>5. பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றம்<br>6. வளர்ச்சிப் பாதையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு<br>7. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி மற்றும் பொருளாதாரக் |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| | | கொள்கைகள் |
| **C – 10.2.** உலகமயமாக்கலினால் நிறுவனங்கள், வருத்தகம், பொருளாதாரம் ஆகியவற்றின் மீதான தாக்கங்களை ஆய்வு செய்தல். | | **உலகமயமாக்கல் மற்றும் வருத்தகம்**<br>1. உலகமயமாக்கல்<br>2. உலகமயமாக்கலின் வரலாறு<br>3. தென்னிந்தியாவில் வருத்தகம் மற்றும் வணிகர்கள் - ஒரு வரலாற்றுப் பார்வை<br>4. இந்தியாவில் உலகமயமாக்கல்<br>5. பன்னாட்டு நிறுவனம்<br>6. நேர்மையான வருத்தக நடைமுறைகள் மற்றும் உலக வருத்தக அமைப்பு<br>7. உலகமயமாக்கலின் தாக்கங்களும் சவால்களும் |
| **C – 10.3.** சமூகத்தில் உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து, வறுமை ஆகியவற்றைப் பாதிக்கும் காரணிகளை ஆய்வு செய்தல். | | **உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து**<br>1. உணவுப் பாதுகாப்பு<br>2. உணவு தானியங்களின் இருப்பும் அணுகலும்<br>3. வாங்கும் திறன்<br>4. இந்தியாவின் வேளாண் |

TNSCERT DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| | | கொள்கை<br><br>5. வறுமையின் பல பரிமாணத்தின் இயல்பு<br>6. ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலை |
| C – 10.4. அரசாங்கக் கொள்கைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் வரிவிதிப்பின் பங்கை ஆய்வு செய்தல். | | **அரசாங்கமும் வரிகளும்**<br><br>1. வளர்ச்சிக் கொள்கைகளில் அரசாங்கத்தின் பங்கு<br>2. வரி<br>3. வரிகளின் வகைகள்<br>4. வரிகள் எவ்வாறு விதிக்கப்படுகின்றன?<br>5. கறுப்புப் பணம்<br>6. வரி ஏய்ப்பு<br>7. வரிகளும் வளர்ச்சியும் |
| C - 10.5. தமிழ்நாட்டில் தொழில் குழுமங்களின் வளர்ச்சியையும் அவற்றின் தனித்துவமான செயல்பாடுகளையும் ஆய்வு செய்தல். | | **தமிழ்நாட்டில் தொழில்துறை குழுமங்கள்**<br>1. தொழில்மயமாக்கலின் முக்கியத்துவம்<br>2. தொழிலகங்களின் வகைகள்<br>3. தொழில் குழுமங்கள்<br>4. தமிழ்நாட்டில் |

TNSCERT DRAFT SYLLABUS

<table>
<tr><td></td><td></td><td>தொழில்மயமாக்கலின் முன்னேற்றம் பற்றிய வரலாறு<br>5. தமிழ்நாட்டின் முக்கிய தொழில்துறை குழுமங்கள் மற்றும் அவற்றின் சிறப்புகள்<br>6. தமிழ்நாட்டில் தொழிற்சாலை உருவாக்கத்திற்கு உதவும் கொள்கைக் காரணிகள்<br>7. தொழில்முனைவோர்</td></tr>
<tr><td>கலைகளின் ஒருங்கிணைப்பு</td><td colspan="2">கற்பவர்களிடம் வளர்க்கப்படுபவை<br>• கருப்பொருள் சார்ந்த ஓவியம் மற்றும் சித்திரம் வரைதல் (நாகரிகங்கள், விடுதலைப் போராட்டம், நிலத்தோற்றங்கள், காலநிலை மண்டலங்கள், மனிதக் குடியிருப்புகள்)<br>• சுவரொட்டி மற்றும் தகவல் வரைபடம் உருவாக்குதல் (அரசியலமைப்பு விழுமியங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நுகர்வோர் உரிமைகள், பேரிடர் தயார்நிலை, தேர்தல்கள்)<br>• காலவரிசையை உருவாக்குதல் மற்றும் காட்சிப்படுத்துதல் (வரலாற்றுக் காலங்கள், விடுதலைப் போராட்டக் காலகட்டங்கள், பொருளாதாரச் சீர்திருத்தங்கள், உலகளாவிய நிகழ்வுகள்)<br>• நில வரைபட அடிப்படையிலான கலை மற்றும் ஆக்கப்பூர்வமான வரைபட உருவாக்கம் ( இயற்கை அமைப்பு நிலவரைபடங்கள், காலநிலை நிலவரைபடங்கள், வர்த்தகப்</td></tr>
</table>

TNSCERT DRAFT SYLLABUS

| | |
|---|---|
| | பாதைகள், இடம்பெயர்வு)<br>• படத்தொகுப்பு உருவாக்குதல் (அச்சுப் பிரதியிலிருந்து மின்னுரு பிரதி வரை, சமூகச் சீர்திருத்த இயக்கங்கள், உலகமயமாக்கலின் தாக்கங்கள்)<br>• மாதிரி உருவாக்குதல் (நிலத்தோற்றங்கள், நீர்ப்பாசன அமைப்புகள், ஊராட்சி அமைப்புகள், நாடாளுமன்றம், சுற்றுச்சூழல் அமைப்புகள்)<br>• வீதிநாடகங்கள், பாத்திரமேற்று நடித்தல் மற்றும் நாடகமாக்குதல் (விடுதலைப் போராட்ட நிகழ்வுகள், அரசியலமைப்புச் சபை விவாதங்கள், சமூகச் சீர்திருத்த இயக்கங்கள்)<br>• நாட்டுப்புறக் கலைகள் ஒருங்கிணைப்பு (தமிழ்நாட்டின் சுவரோவியங்கள், கோலம், வரலாறு மற்றும் புவியியலுடன் தொடர்புடைய பாரம்பரியச் சின்னங்கள்)<br>• புகைப்படத் தொகுப்பு மற்றும் காட்சிகள் மூலம் கதை சொல்லுதல் (நகரமயமாக்கல், சுற்றுச்சூழல் மாற்றம், வாழ்வாதாரங்கள், பாரம்பரியத் தளங்கள்)<br>• மின்னுருக் கலை மற்றும் ஊடக படைப்பாக்கம் (குறும்படங்கள், விளக்கக்காட்சிகள், புவியியல் தகவல் அமைப்பு காட்சிகள், தரவுகளை வரைப் படங்கள் மற்றும் விளக்கப் படங்களாக மாற்றியமைத்தல்) |
| **வாழ்வியல் திறன்களை ஒருங்கிணைத்தல்** | **கற்பவர்களிடம் வளர்க்கப்படுபவை**<br>● திறனாய்வுச் சிந்தனை மற்றும் சிக்கல் தீர்க்கும் செயல்பாடுகள் (வரலாற்று ஆதாரங்களைப் பகுப்பாய்வு செய்தல், காலநிலை மாற்றம் குறித்த நிகழ்வாய்வுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்)<br>● தொடர்பு மற்றும் ஒத்துழைப்புச் செயல்பாடுகள் (குழு விவாதங்கள், |

TNSCERT DRAFT SYLLABUS

| | |
|---|---|
| | சமகாலப் பிரச்சினைகள் குறித்த விவாதங்கள், குழு கலந்துரையாடல்கள்)<br>● செயல்திட்டங்கள் (உள்ளூர் வரலாறு, சுற்றுச்சூழல் ஆய்வுகள், பொருளாதாரக் கணக்கெடுப்புகள், இடம்பெயர்வு முறைகள்)<br>● நிதியியல் அறிவுத் திறன் பயிற்சிகள் (வரவு-செலவுத் திட்டமிடல், மின்னுருப் பணப்பரிவர்த்தனைகள், வங்கி குறித்த விழிப்புணர்வு, நுகர்வோர் உரிமைகள்)<br>● குடிமைப் பங்கேற்புச் செயல்பாடுகள் (மாதிரி தேர்தல்கள், மாணவர் மன்றங்கள், சமூகக் கணக்கெடுப்புகள்)<br>● மின்னுரு அறிவுத் திறன் செயல்பாடுகள் (நிலவரைபடக் கருவிகள், தரவுகளைப் விவரணம் செய்தல், தவறான தகவல்களைக் கண்டறிதல், இணையப் பாதுகாப்பு)<br>●தலைமைத்துவம் மற்றும் குழுப்பணி பயிற்சிகள் (செயல்திட்டத்திற்கான திட்டமிடல், சக மாணவர்களுக்கு வழிகாட்டுதல், சமூக முயற்சிகள்)<br>● நேர மேலாண்மை மற்றும் இலக்கு நிருணயம் (செயல்திட்டங்களுக்கான கால அட்டவணை, சுயமாகக் கற்றல் செயல்பாடுகள்)<br>● சுயசிந்தனைப் பதிவேடு (கற்றல் அனுபவங்கள், சமூகப் பொறுப்பு, தனிப்பட்ட வளர்ச்சி) |
| **விழுமியங்களை ஒருங்கிணைத்தல்** | **கற்பவர்களிடம் வளர்க்கப்படுபவை**<br>● விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட விவாதங்கள் மற்றும் சிந்தனைகள் (சமத்துவம், நீதி, சுதந்திரம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை)<br>● சமூக நீதி மற்றும் உள்ளடக்கத்தன்மை குறித்த தனியாள் ஆய்வுகள் (பாலின சமத்துவம், சாதி சமத்துவம், விளிம்புநிலை |

TNSCERT DRAFT SYLLABUS

| | |
|---|---|
| | சமூகங்கள்)<br>● சமூக சேவை மற்றும் சமூக நலப் பணிகள் (தூய்மை இயக்கங்கள், விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், கழிவு மேலாண்மை முயற்சிகள்)<br>● சுற்றுச்சூழல் பாதுகாப்புச் செயல்பாடுகள் (மரக்கன்றுகள் நடுதல், நீர் பாதுகாப்பு, உயிரினப் பன்முகத்தன்மையைப் பாதுகாத்தல்)<br>● நெறிமுறை சார்ந்த விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் (காலனித்துவம், அதிக நுகர்வு மனப்பான்மை, வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை)<br>● அமைதி மற்றும் நல்லிணக்க முயற்சிகள் (முரண்பாடுகளுக்கான தீர்வுகள், பாத்திரமேற்று நடித்தல், பல்வேறு கலாச்சாரங்களைப் புரிந்துகொள்ளும் செயல்பாடுகள்)<br>● பன்முகத்தன்மையை மதிக்கும் செயல்பாடுகள் (பல்வேறு தன்மைகளை ஏற்றுக்கொள்ளும் நிலை, மொழிப் பன்முகத்தன்மை, மண்டல அடையாளங்கள்)<br>● பொறுப்பான குடிமக்களுக்கான நடைமுறைகள் (சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு, வாக்களிப்பு விழிப்புணர்வு, மின்னுரு பொறுப்புணர்வு)<br>● பிறர் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் செயல்பாடுகள் (இடம்பெயர்வு கதைகள், அகதிகளின் அனுபவங்கள், வாய்மொழி வரலாறுகள்)<br>● உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்த சிந்தனை (அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலைகள் மூலம் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளைப் புரிந்துகொள்ளுதல்) |

TNSCERT DRAFT SYLLABUS

**குறிப்பு : இப்பாடத்திட்டமானது வயதிற்கேற்ற கலைச் செயல்பாடுகள், வாழ்வியல் திறன்கள் மற்றும் விழுமியங்களைப் பாட உள்ளடக்கத்துடனும் தொடர்புடைய பாடத்திட்டக் கூறுகளுடனும் ஒருங்கிணைக்கிறது.**

## கற்பித்தல் அணுகுமுறை

உயர்நிலைப் பள்ளியில் கற்பித்தல் அணுகுமுறையானது ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட கற்றல், ஆய்வுகள் அடிப்படையிலான கற்றல் மற்றும் ஆசிரியர்–மாணவர் இடைவினை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. மனப்பாடக் கற்றலுக்கு பதிலாக, மாணவர்கள் வினாக்களைக் கேட்கவும், தங்களுடைய ஆய்வின் அடிப்படையில் நிகழ்வுகளைப் புரிந்துகொண்டு விளக்கவும் ஊக்குவிக்கப்படுகின்றனர். அனுபவக் கற்றல் முறையின் மூலம், மாணவர்கள் தங்களுடைய சொந்த விமர்சனக் கருத்துகள் மற்றும் கண்ணோட்டங்களை உருவாக்கப் பயிற்றுவிக்கப்படுகின்றனர். பாடப்பொருளுடன் தொடர்புடைய முதன்மை மற்றும் இரண்டாம் நிலை ஆதாரங்களை ஆய்வு செய்யவும், குழு விவாதங்கள், களப்பயணங்கள் மற்றும் செயல்திட்டப் பணிகளில் ஈடுபடவும் உதவும் வகையில் வகுப்பறைக் கற்பித்தல் அமைக்கப்பட்டுள்ளது. முதன்மை ஆதாரங்கள், ஆவணங்கள், கலைப்பொருட்கள் மற்றும் இதழ்கள், செய்தித்தாள்களில் இடம்பெறும் கட்டுரைகள் போன்ற இரண்டாம் நிலை ஆதாரங்களை ஆய்வு செய்யும் திறன்கள் மாணவர்களிடம் வளர்க்கப்படுகின்றன. புவியியல் தகவல் அமைப்பு மென்பொருள், தரவுப் பகுப்பாய்வு போன்ற மின்னுரு கருவிகளைப் பயன்படுத்துதல் மற்றும் சமகாலப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அவற்றில் பங்கேற்பது ஆகியவற்றின் மூலம், மாணவர்கள் தங்கள் கற்றலை அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலைகளுடன் தொடர்புபடுத்தும் திறனும், பொறுப்புணர்வுள்ள குடிமைச் சமூகத்தை உருவாக்கும் திறனும் மேம்படுத்தப்படுகின்றன.

## மதிப்பீட்டு உத்திகள்

இந்தப் பாடத்திட்டத்தில் மதிப்பீடானது தொடர்ச்சியான, முழுமையான மற்றும் மாணவர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையாக அமைக்கப்பட்டுள்ளது. இது மேற்கூறிய கற்றல் நோக்கங்கள் மற்றும் கற்பித்தல் உத்திகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. வளரறி மதிப்பீடு மற்றும் தொகுத்தறி மதிப்பீடு ஆகிய இரண்டையும் சமநிலையுடன் பயன்படுத்துவது பரிந்துரைக்கப்படுகிறது. உருவாக்கும் மதிப்பீடுகளில் ஆதார அடிப்படையிலான வினாக்கள், பகுப்பாய்வு மற்றும் பயன்பாடு சார்ந்த பணிகள், சிக்கல் தீர்க்கும் செயல்பாடுகள், நிலவரைபடப் பணிகள், விளக்கக்காட்சிகள், விவாதங்கள், பொருள் விளக்கும் திறன்கள், செயல்திட்ட பணிகள் ஆகியவை அடங்கும். தொகுத்தறி மதிப்பீடுகள் மாணவர்களின் கருத்துக்களைப் புரிந்துகொள்ளுதல், திறனாய்வுச் சிந்தனை, தரவுகளை விளக்கும் திறன் மற்றும்

TNSCERT DRAFT SYLLABUS

சமகாலச் சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தும் திறன் ஆகியவற்றை மதிப்பிடுவதில் கவனம் செலுத்துகின்றன. நினைவுகூர்ந்து பதிலளிக்கும் வினாக்களுக்கு பதிலாக, விளக்கமான மற்றும் சுயசிந்தனை சார்ந்தப் பதில்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. வழக்கமான பின்னூட்ட முறைகள் பாடத்திட்டத்தின் கற்றல் செயல்முறையின் ஒருங்கிணைந்த பகுதியாக அமைக்கப்பட்டுள்ளன. சுயமதிப்பீடு மற்றும் சகமாணவர் மதிப்பீடு மூலம் மாணவர்களின் முன்னேற்றத்தை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும். இதன் மூலம் அறிவுடைய, பொறுப்புணர்வுள்ள மற்றும் சுயசிந்தனை கொண்ட குடிமக்களின் முழுமையான வளர்ச்சி உறுதி செய்யப்படுகிறது.

TNSCERT DRAFT SYLLABUS